
# உடன்பிறப்பே... 73

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த க.ரா.சுப்பையன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**



# க.ரா.சுப்பையன் “கோவை கழக வைரத்தூண்!”

1998-ஆம் ஆண்டு பிப்ரவரியில் 12-வது மக்களவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. தேர்தல் களம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த நாட்களில், கோவையில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் நாட்டையே உலுக்கியது. அந்தச் சம்பவத்துக்குப் பின் 14 நாட்களில் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்தது. அப்படி வெற்றி வாய்ப்பை இழந்தவர்களில் கோவைத் தொகுதி கழக வேட்பாளரும் ஒருவர். கழகத்துக்குத் தோல்விகள் புதிதில்லை. அந்த வேட்பாளரும் தோல்வியில் துவளவில்லை. வழக்கம்போல, அவருக்குக் கழகத்தின் வழக்கு அலுவல்கள் காத்திருந்தன. அவர்தான் கண்டியூர் ராமையா சுப்பையன். சுருக்கமாக க.ரா.சுப்பையன். கோவை கழகத்தினருக்கு க.ரா என்றால், இன்னும் எளிதாக நெருக்கமான அடையாளம்.

கோவை மாவட்டம், காரமடை அருகே கண்டியூர் என்னும் கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் சுப்பையா. 1938-ஆம் ஆண்டு, பிப்ரவரி 20 அன்று பிறந்தவர். பெற்றோர் இராமையா-குப்பம்மாள்.

கல்விப் பின்புலம் எதுவும் இல்லாத குடும்பத்தில் பிறந்த சுப்பையன், முதல் தலைமுறைப் பட்டதாரியானதுடன், சட்டம் பயின்று வழக்கறிஞராகத் தொழில் செய்யத் தொடங்கியது தனி வரலாறு. அது சாதாரணமாக நிகழ்ந்துவிடவில்லை, கல்விக்காகக் கடும் போராட்டங்களைச் சந்தித்தவர் க.ரா. அவருக்குத் துணை நின்றது திராவிடச் சிந்தனை.

குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம், கல்லூரி மாணவர்கள் மத்தியில் உருவாக்கிய இலட்சிய எழுச்சி. அவர் கல்லூரி படித்த காலத்தில்தான் கழகம் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சத்தில் இருந்தது. அந்தப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டவர் சுப்பையன்.

## இலட்சிய உணர்வுக் காலம்

‘ஒவ்வொரு மனிதருக்கும் ஓர் இலட்சிய உணர்வு வேண்டும்’ என பேரறிஞர் அண்ணா, கலைஞர் மற்றும் கழக முன்னோடிகள் கல்லூரி மாணவர்கள் மத்தியில் அரசியல் செய்த காலம் . அந்தத் தன்மான உணர்வோடு அறிஞர் அண்ணாவின் பாசறையில் தன்னை இணைத்துக் கொண்டவர் சுப்பையன். கல்லூரியில் தமிழ் மன்ற மாணவர் தலைவராகப் பணியாற்றியதுடன், அப்போதே கழக மேடைகளில் கொள்கை முழங்கும் சொற்பொழிவாளராக கோவை கழகத் தொண்டர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

1972-ஆம் ஆண்டு கழக ஆட்சிக்காலத்தில் கோவையில் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். மிக இளவயதில் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றியவர் என்கிற அடையாளம், அவரின் திறமைக்கான சான்று.

கலைஞரின் தொண்டர் என்கிற இடத்தை அவர் எப்போதும் தவறவிட்டதில்லை. கோவையில் மூத்த முன்னோடிகள் மு.ரா., சி.டி.தண்டபாணி., கண்ணப்பன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். நேரடி அரசியல் பணிகளில் இல்லையென்றாலும், தினசரி கழகத்தின் தொழிற்சங்க வழக்குகள் அவரை இயக்கிக் கொண்டிருக்கும். போக்குவரத்துத் தொழிற்சங்கங்கள் தொடங்கப்பட்டபோது, கழகத்தின் தொ.மு.ச. பேரவைப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

1974-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டார். நெருக்கடி நிலையின்போது, கழகத்தினர் தேடித் தேடி கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டனர். சுப்பையன் வழக்கறிஞர் என்பதால், கைது செய்யப்படவில்லை, ஆனால், காவல்துறை கண்காணிப்பில் இருந்தார். என்றாலும், மிசா வழக்குகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, கலைஞரின் தொண்டனாக கழகத்தினருடன் நின்றார்.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது கோவை மாநகர் மாவட்டக் கழக செய லாளராகவும், உள்கட்சி நெருக்கடி காலத்தில் கோவைக் கழகத்தின் இரும்புத்தூணாகவும், மாநகர் மாவட்டக் கழகப் பொருளாள ராகவும் இருந்தார். மாநிலத் தீர்மானக்குழுத் துணைத் தலைவராகவும் இருந்தவர் சுப்பையன்.

## கழகமே கண்

கழகம் அறிவித்த போராட்டக் களங்களில் பங்கு கொண்டு பல்வேறு முறை சிறை சென்றுள்ளார். மாநகர் மாவட்டச் செயலாளராக இருந்த போது ஒரே ஆண்டில் 136 பொதுக் கூட்டங்களை நடத்தி, கலைஞரின் பாராட்டைப் பெற்றவர் சுப்பையன்.

அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர் என்பதால், உயர் நீதிமன்ற நீதிபதியாகும் தகுதியும், வாய்ப்பும் வந்தது. ஆனால், அதை மறுத்ததுடன், தான் என்றும் கலைஞரின் உடன்பிறப்பு, கழகத்தின் உண்மைத் தொண்டராகவே இருக்க விரும்புகிறேன் என உறுதியாக நின்றவர் என கோவை கழகத்தினர் அவரது கொள்கை உறுதியை நினைவுகூர்ந்து பாராட்டு கின்றனர்.

சுப்பையனின் அர்ப்பணிப்பை அறிவார், தலைவர் கலைஞர். அதனால்தான், 1998-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கோவைத் தொகுதியின் வேட்பாளராக அவரை அறிவித்தார். ஆனால், அன்றிருந்த காலச்சூழலால் க.ரா.சுப்பையனால் வெற்றிக்கனியைப் பறிக்க முடியவில்லை.

## மாநிலங்களவை வாய்ப்பு

தொடந்து, மாவட்டக் கழக அலுவலகத்தையே தனது முழுநேரப் பணிக்களமாக மாற்றிக் கொண்டு இயங்கினார் க.ரா. 2000-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் இருந்து இடம்பெற வேண்டிய இரண்டு மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தலில் அவரைப் போட்டியிட வைத்து, வெற்றிபெற வைத்தார் கலைஞர்.

க.ரா மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோது, அவருக்கு ஒதுக்கப்பட்ட மேம்பாட்டு நிதியை முழுமையாக மக்களுக்காகப் பயன்படுத்தியவர் என்கிற பெருமை பெற்றவர்.

மாநிலங்களவை உறுப்பினர் பதவிக் காலத்துக்குப் பின்னர், தீவிரப் பணி களைக் குறைத்துக் கொண்டு, இளை ஞர்களுக்கு வழி விட்டவர் சுப்பையன் அவர்கள். கழகத்தின் தீர்மானக் குழுச் செய லாளராகப் பொறுப்பு வகித்தபோது மிக ஆர்வமாக கழகப்பணி ஆற்றியவர் சுப்பையன். வயது மூப்பு காரணமாக ஓய்வில் இருந்த சுப்பையனை, இன்றைய முதலமைச்சர் அவர்கள், கோவைக்குச் செல்லும்போதெல்லாம், சந்தித்து நலம் விசாரித்து வருவதை வழக்கமாக வைத்திருந்தார். பேரறிஞர் அண்ணா, கலைஞர், கழகம் என்கிற உணர்வுகளுடன் வாழ்ந்த சுப்பையன் அவர்களுக்கு, இன்றைய முதல்வர் காட்டிய மரியாதையும் அன்பும் கழகத்தினர் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம்.

2019-ஆம் ஆண்டு, பிப்ரவரி 17-ஆம் தேதி இயக்கத்தை நிறுத்திக் கொண்ட க.ரா.சுப்பையன் கழக முன்னோடியாக, காலத்தில் நிலைத்து நிற்கிறார்.

**நேரடி அரசியல் பணிகளில் இல்லையென்றாலும், தினசரி கழகத்தின் தொழிற்சங்க வழக்குகள் அவரை இயக்கிக் கொண்டிருக்கும்.**

‘கோவை மாநகர மாவட்டக் கழகத்தின் வைரத்தூண்களில் ஒருவர். சாதாரண குடும்பத்தில் பிறந்து, கழக வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லாமல் இருந்தபோதும், என்னை அழைத்துக் கூட்டம் நடத்தியவர் க.ரா.சுப்பையன்’ என இன்றைய முதல்வர் அவர்கள் சுப்பையன் அவர்களின் பெருமைகளை ‘முரசொலி’ இரங்கல் அறிக்கையில் எழுதினார். தலைமைக் கழக நிர்வாகிகளும், மாவட்டக் கழகமும் திரண்டு நின்று க.ரா.சுப்பையனுக்கு இறுதி மரியாதை செய்தனர்.

கோவை மாவட்டக் கழகத்தினரிடமும், மக்களிடமும் ஈடுபாட்டுடன் அவர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவுகூரத்தக்கவை. அவை அடுத்த தலைமுறை கழகத்தினரிடமும் சென்று சேர வேண்டும்.

**...துடிக்கும்**

## பார்க்கவும், பகிரவும்...




இந்தியாவின் தொழில்துறை உற்பத்தி சார்ந்த குறியீடுகளில் பல துறைகளில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக நீடித்து வருகிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ்நாடு அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருவதை அறிவோம். இது தொடர்பான புள்ளிவிவரங்களைப் படக் குறிப்புகளாக X தளத்தில் அளிக்கிறது PEN_Offl என்கிற பக்கம்.

இந்திய அளவில் தோல் பொருட்கள் ஏற்றுமதியில், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் வேலூர், ஆம்பூர், ராணிப்பேட்டை, வாணியம்பாடி, திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், திருச்சி ஆகிய நகரங்கள் தோல் பொருட்கள் உற்பத்திக்கு உகந்த பகுதிகளாக உள்ளன என்கிற விவரங்களும் இருக்கின்றன.

ஆண்டு முழுவதும் மலர் விவசாயம் செய்ய ஏதுவாக தமிழ்நாட்டின் காலநிலை உள்ளது. இதன் காரணமாக பாரம்பரிய ரகங்களோடு, ஐரோப்பிய ரக மலர்களும் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்திய அளவில் பூக்கள் உற்பத்தியின் ஆணிவேராக தமிழ்நாடு திகழ்கிறது, என்கிற தரவுகளையும் படங்களாக அளிக்கிறது.

கழக ஆட்சியின் சமூக நீதித் திட்டங்களால் பயன்பெற்று, வெளிநாடுகளில் முக்கியப் பொறுப்புகளில் உள்ள தமிழர்களைத் தேடிச் சென்று அவர்களின் கருத்துகளைப் பதிவு செய்யும் வீடியோக்களும் மக்களிடம் கவனம் பெற்று வருகின்றன. பார்க்கவும், பகிரவும் பயனுள்ள பக்கம்.

## :ப்ளாஷ்பேக்



### அராஜக ஆட்சியைக் கண்டித்து பொதுக்கூட்டம்!



**எம்.எஸ்.பி.பாண்டியன்**

2003-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் நகரம் 35-வது வட்ட இளைஞர் அணி அமைப்பாள ராகப் பொறுப்பில் இருந்தேன். அப்போது, அ.தி.மு.க ஆட்சியின் அராஜகப் போக்குகளைக் கண்டித்து, காஞ்சிபுரம் நகரில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அந்தப் பொதுக்கூட்டத்தில். வட்ட இளைஞர் அணியைச் சேர்ந்த 20 பேருடன் கலந்துகொண்டேன். அப்போது, மேடையில் தளபதி அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

**– எம்.எஸ்.பி.பாண்டியன், மாநகரப் பிரதிநிதி, காஞ்சிபுரம் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### இலட்சியக் கொடி!

1945-ஆம் ஆண்டு, டிசம்பர் 15-ஆம் தேதி சென்னை, தங்கசாலையில் சென்னை மாகாண திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. ‘ஜஸ்டிஸ் கட்சி’ பெயர் மாற்றம் செய்யப்பட்ட நிலையில், திராவிடர் கழகத்துக்குப் புதிய கொடியை ஓராண்டுக்குள் வடிவமைக்க வேண்டும் என அப்போது தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ‘கொடி, விஞ்ஞான அறிவு, இலட்சியம் இவைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். யாரும் சர்வசாதாரணமாக தயாரித்துவிடக்கூடியதாக இருக்க வேண்டும்’ என பெரியார் ஆலோசனை கூறினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

586

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.